நடவடிக்கை எடுக்க முடியும். எனவே, அதற்குத் தனியாக ஆய்வு செய்து பதில் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 184, திரு. டி. சுதர்சனம் இருக்கையில் இல்லை, அவருக்கு பதிலாக திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

184—

வடசென்னையில் லாரிகள் போக்குவரத்தை முறைப்படுத்துதல்

***9302**—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடசென்னையில் லாரிகள் போக்குவரத்தினால் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் அங்குள்ள சாலைகளில் செல்வதற்கு சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், லாரிகள் போக்குவரத்தை முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்;

(ஆ) இப்பொழுது சென்னை நகரின் மத்தியிலுள்ள கொத்தவால் சாவடியை நகருக்கு வெளியே கோயம்பேட்டில் அமைக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் செயல்படும்போது லாரி போக்குவரத்து நெரிசல் குறையும். சரக்கு வாகனங்கள் நகரின் உட்புறத்திற்கு வருவதைக் குறைப்பதற்கென நகருக்கு வெளியே மாதவரம் பீர்க்கங்கரணை ஆகிய இடங்களில் சரக்கு வாகனங்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னையில் அதிகமான அளவில் பெரிய பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. குறிப்பாக அசோக் லேலாண்டு, எண்ணூர் ஃபவுண்டரி, இ.டி.பி.எஸ்., எம்.எப்.எல்., எம்.ஆர்.எல்., என்பீல்ட், போன்ற பெரிய பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தால், தொழிற்சாலைகளுக்கு

வருகின்ற வாகனங்கள் அதிகமான எடையுள்ள வாகனங்களாக வருகின்ற காரணத்தால், அங்கே போக்குவரத்து நெரிசல் இருக்கின்றது. அதேபோல, குறிப்பாக எம்.எப்.எல். தொழிற்சாலை அருகில் சாலைகளிலேயே லாரிகளை நிறுத்திவிட்டு சென்றுவிடுகிறார்கள். இதனால் லாரிகளைத் தவிர மற்ற பேருந்துகள், கார்கள் போன்றவை சென்னைக்கு வருவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, இதனை ஒழுங்குபடுத்துவதற்கு லாரிகளைத் தவிர—குறிப்பாக கன்டெய்னர்கள் ஏற்றிக்கொண்டு வருகின்ற லாரிகளால் பல்வேறு விபத்துக்கள் ஏற்பட அங்கே வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த போக்குவரத்தை சீர் செய்து—பேருந்துகளும் மற்றும் கார்களும் போய் வருவதற்கு உரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்திலே இருக்கின்ற லாரிகள் நெரிசலை எப்படி தவிர்க்க வேண்டும் என்கிற கேள்வியிலே உறுப்பினர் அவருடைய தொகுதியிலே இருக்கின்ற பிரச்சினையை சுட்டிக்காட்டினார்கள். அரசு கவனத்திலே வைத்து அந்த லாரிகளை எந்தெந்தப் பகுதிகளிலே நிறுத்துவது, சீரான முறையிலே பேருந்துகளை எப்படி இயக்குவது என்பதை காவல் துறையை வைத்துக் கொண்டு, பல்லவன் போக்குவரத்துக் கழகம், அம்பேத்கார் போக்குவரத்துக் கழகம் போன்ற கழகங்களின் நிர்வாக இயக்குநர்களோடு பேசி, சீரான முறையிலே பேருந்துகளை இயக்குவதற்கும், மற்ற வாகனங்களை இயக்குவதற்கும் நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் வடசென்னை மட்டுமல்லாமல் சென்னை நகர் முழுவதுமே போக்குவரத்து நெரிசல். நாட்கள் ஆக ஆக போக்குவரத்து அதிகமாகிக் கொண்டே போகிறது. இதைப் போக்குவதற்கு ஹாங்காங் நாட்டில் இருப்பதைப் போல பாதாள ரோடு உலக வங்கியின் உதவியுடன் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே இருக்கின்ற நெரிசலைக் குறைக்கின்ற வகையிலே சாலைகளை விரிவுபடுத்துதலோடு, சீரான முறையிலே பேருந்துகளை இயக்குவதற்கு காவல் துறையோடு இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு

உறுப்பினர் குறிப்பிட்டதை அவர் இங்கே மற்றொரு கேள்வியாக போடுவார் களேயானால் அதற்கான விளக்கங்களை அரசு அறிவிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 185, திரு. ஆ. கு. சீனிவாசன், இருக்கையில் இல்லை. அவருக்கு பதிலாக டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

185—

சென்னை-செங்கத்திற்குப் பேருந்து இயக்குதல்

***36635**—*திரு. ஆ. கு. சீனிவாசன் :*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் வழியாக சென்னையிலிருந்து செங்கத்திற்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட 141-பி பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாக, 11 கி.மீ. அதிகம் உள்ளதால் பயணிகள் விரும்பிப் பயணம் செய்வதில்லை. மேலும் இத்தடத்தில் போதிய பேருந்து வசதிகள் உள்ளது. எனவே 141-பி பேருந்தை மீண்டும் பெரணமல்லூர் வழியாக சென்னையிலிருந்து செங்கத்திற்கு இயக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

முற்பகல் 10-15

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து செங்கம், போளூர், பெரணமல்லூர் வழியாக சென்னைக்கு சென்று கொண்டிருந்தது. 141-பி அந்த என்ற வழித்தடப் பேருந்து, கடந்த 6 மாதங்களாக, பெரணமல்லூர் வழியாக சென்ற அந்த வழித்தட 141-பி பேருந்து ஆரணி வழியாக சென்னை சென்று கொண்டிருக்கிறது. எனவே, மீண்டும் அதை பெரணமல்லூர் தொகுதிக்கு, போளூர் வழியாக, சென்னைக்கு இயக்கினால் ஒரு பக்கம் சென்னைக்கும், மற்றொரு பக்கம் செங்கத்திற்கும், போளூருக்கும் தொடர்பு ஏற்படும் என்ற நோக்கத்தில்தான்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS